டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித்திட்டம்

தமிழக அரசின் பல சிறப்பு மக்கள் நல்வாழ்வு திட்டங்களில் ஒன்றான டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதிஉதவித்திட்டத்தின் கீழ் ரூ.12,000/- வழங்கப்படுகிறது.

`இத்திட்டத்தின் மூலம் ஏழை கர்ப்பிணிப்பெண்கள் பயன்பெறுவர். இத்திட்டம் சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ், அரசு மருத்துவமனை மற்றும் சென்னை மாநகராட்சி மருத்துவமனைகளில் பரிசோதனை மற்றும் பிரசவம் மேற்கொள்ளும் அனைத்து ஏழை கர்ப்பிணிப்பெண்களுக்கும் முதல் இரண்டு பிரசவங்களுக்கு ரூ.12,000/-ம் மூன்று தவணைகளாக வழங்கப்படுகிறது. இதன் மூலம் கர்ப்பிணிகளை பதிவு செய்தல் மருத்துவமனை பிரசவங்கள் மற்றும் தடுப்பூசி சேவைகள் ஆகியவை மேம்பட்டுள்ளன.

இத்திட்டத்தில் உதவி பெற இருக்க வேண்டிய தகுதிகள்

1) கருவுற்ற பெண்ணின் வயது 19 அல்லது அதற்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

2) கருச்சிதைவிற்கோ, கருக்கலைப்பிற்கோ மகப்பேறு உதவித் தொகை \ வழங்கப்படாது.

3) தாய் மகப்பேறு மரணம் அடைந்து விட்டால் குழந்தையின் பாதுகாவலருக்கு இரண்டாவது மற்றும் மூன்றாவது தவணை மகப்பேறு நிதி உதவி வழங்கப்படும்.

4) குழந்தை இறந்து பிறந்தாலோ, பிறந்தவுடன் இறந்து விட்டாலோ அல்லது மூன்றாவது தவணை தடுப்புஊசி போடுவதற்கு முன் குழந்தை இறந்து விட்டாலோ தாய்க்கு இரண்டாவது தவணை மகப்பேறு நிதி உதவி ரூ.4,000/- மட்டும் வழங்கப்படும்.

5) தமிழ் நாட்டில் வசிக்கும், இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்த கர்ப்பிணிப் பெண்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெறலாம்.

6) தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் – விவாயிகள் (சமூகப்பாதுகாப்பு மற்றும் நலம்) திட்ட உறுப்பினர் திட்டத்தில் உறுப்பினராக உள்ள அனைவரும் மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற தகுதியானவர்கள். மகப்பேறு நிதியுதவி இரண்டு பிரசவங்களுக்கு மட்டும் வழங்கப்படும்.

7) அமைப்பு சாரா தொழிலாளர் நலவாரியம் / ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவரிடம் மகப்பேறு நிதியுதவி பெற விண்ணப்பித்தவர்கள் அமைப்பு சாராதொழிலாளர் நலவாரியம் அல்லது ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவரிடம் தடையில்லா சான்றிதழ் (No Objection Certificate) பெற்று, தமிழக அரசின் மூலம் வழங்கப்படும் மகப்பேறு நிதி, கர்ப்பிணித்தாய்மார்கள் ஏதாவது ஒரு துறையின் மூலம் மட்டுமே பயன் பெற முடியும்.

தகுதி முறை

இத்திட்டத்தில் பயன்பெற நிபந்தனைகள்

1) களப்பணியாளரிடம் பதிவு செய்ய வேண்டும்.

2) PICME எண்பெற வேண்டும்

3) தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் பயனாளியின் பெயரில் செமிப்பு கணக்கு இருக்க வேண்டும்.

| நிபந்தனை | முதல் தவணை | இரண்டாம் தவணை | மூன்றாம் தவணை |
|---|---|---|---|
| அரசு மருத்துவநிலையங்களில் கர்ப்பகால சேவைகள் பெறும் மற்றும் அரசு மருத்துவ நிலையங்களில் பிரசவிக்கும் அனைத்து தாய்மார்கள். | தகுதியானவர்கள் | தகுதியானவர்கள் | தகுதியானவர்கள் |
| அரசு மருத்துவ நிலையங்களில் கர்ப்பகால சேவைகள் பெறும், ஆனால் தனியார் மருத்துவமனைகளில் பிரசவிக்கும் அனைத்து தாய்மார்கள் | தகுதியானவர்கள் | தகுதி இல்லாதவர்கள் | தகுதி இல்லாதவர்கள் |
| தனியார் மருத்துவ மனைகளில் கர்ப்பகால சேவைகள் பெறும், | தகுதி இல்லாதவர்கள் | தகுதியானவர்கள் | தகுதியானவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| ஆனால் அரசு மருத்துவநிலையங்களில் பிரசவிக்கும் அனைத்து தாய்மார்கள் | | | |
| தனியார் மருத்துவ மனைகளில் கர்ப்பகால சேவைகள் பெறும், மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் பிரசவிக்கும் அனைத்து தாய்மார்கள். | தகுதி இல்லாதவர்கள் | தகுதி இல்லாதவர்கள் | தகுதி இல்லாதவர்கள் |

முதல் தவணை

·கர்ப்பகாலத்தில் கர்ப்பகால சேவைகளை அரசு/அரசு சார்ந்த மருத்துவமனை / ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெற்று முதல் தவணையாக ரூ.4,000/-ம்

இரண்டாம் தவணை

·அரசு/அரசு சார்ந்த மருத்துவமனை/ ஆரம்ப சுகாதார நிலையங்களில் பிரசவித்த பின் இரண்டாவது தவணையாக ரூ.4,000/-ம்

மூன்றாம்தவணை

·குழந்தைக்கு மூன்று தவணை தடுப்பூசி அளித்த பின்பு மூன்றாவது தவணையாக ரூ.4,000/-ம் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவார்கள்.

சென்னை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ஏதேனும் சந்தேகங்கள் ஏற்பட்டால், கீழ்க்கண்ட வார்டு எல்லைக்குட்பட்டவர்கள், தொலைபேசி எண் மூலம் விளக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

| மண்டலம் எண். | மண்டலங்களின் பெயர் | வார்டு எண். | தொலைபேசி எண். |
|---|---|---|---|
| 1 | திருவொற்றியூர் | 1 - 14 | 9445190711 |
| 2 | மணலி | 15 - 21 | 9445190712 |
| 3 | மாதவரம் | 22 - 33 | 9445190713 |
| 4 | தண்டையார்பேட்டை | 34 - 48 | 9445190714 |
| 5 | இராயபுரம் | 49 - 63 | 9445190715 |
| 6 | திரு.வி.க. நகர் | 64 - 78 | 9445190716 |
| 7 | அம்பத்தூர் | 79 - 93 | 9445190717 |
| 8 | அண்ணாநகர் | 94 - 108 | 9445190718 |
| 9 | தேனாம்பேட்டை | 109 - 126 | 9445190719 |
| 10 | கோடம்பாக்கம் | 127 - 142 | 9445190720 |
| 11 | வளசரவாக்கம் | 143 - 155 | 9445190721 |
| 12 | ஆலந்தூர் | 156 - 167 | 9445190722 |
| 13 | அடையார் | 168 - 182 | 9445190723 |
| 14 | பெருங்குடி | 183 - 191 | 9445190724 |
| 15 | சோழிங்கநல்லூர் | 192 – 200 | 9445190725 |